1977 ஆகஸ்ட் 5]

தொழிலாளர் துறை அலுவலர் இந்தப் பிரச்சினையை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். இதற்கிடையில் இதே நிறுவனத்தைப் பற்றிய பிரச்சினை பல மாநிலங்களில் எழும்பியிருந்ததால் 6-7-1977-ம் தேதியன்று மத்திய தொழிலாளர் நல அமைச்சர் இருதாரப்பினரையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். அதன் விளைவாக ஒரு சுமுக உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி நிர்வாகம் 1—4—1977 முதல் இடைக்கால நிவாரணத்தில் 50 சத விதமும், 1—1—1978 முதல் முழுமையாகவும் கொடுக்க இசைந்தது. தொழிலாளரும் 7-7-1977 முதல் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்பினர்.

*19 வினா—திரு. வி. கே. கோண்டராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி பத்திரிக்கை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், எந்தத் தேதி முதல்?

(இ) அதற்கான காரணம் என்ன?

(ஈ) அரசு அதுகுறித்து எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ), (ஆ) & (இ) ஊதியக் குழுவின் இடைக்கால நிவாரணம் பற்றிய பரிந்துரையினை நிர்வாகம் அமுல்படுத்தாமைக்காக, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி பத்திரிக்கை ஊழியர்கள் 26-6-1977 முதல் 6-7-1977 வரை வேலைநிறுத்தம் செய்தார்கள்.

(ஈ) சென்னை இரண்டாவது சரகம் தொழிலாளர் அலுவலர் இதுகுறித்து விசாரணை மேற்கொண்டார். இதற்கிடையில், இந்தப் பிரச்சினை பல மாநிலங்களில் எழுந்திருந்தால் அனைத்திந்திய ரீதியில் மத்திய தொழிலாளர் நல அமைச்சர் இருதாரப்பினரையும் புது டெல்லிக்கு அழைத்து 6-7-1977 அன்று பேச்சுவார்த்தைகள் நடத்தினர். அங்கு ஏற்பட்ட உடன்பாட்டின்படி இந்நிறுவன ஊழியர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு 7-7-1977 முதல் வேலைக்குத் திரும்பினர்கள்.

[1977 ஆகஸ்ட் 5

திரு. வி. கே. கோதண்டராமன்: தீர்ப்புக்கு மாறாக 50 சத வீதம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மீதி 50 சதவீதம் பிறகு கொடுப்பார்களா? அல்லது இந்த 50 சதவீதத்தோடு முடிவு செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இந்த ஒப்பந்தம் அகில இந்திய ரீதியில் யூனியன் லேபர் மினிஸ்டர் முன்னால் 6-7-1977-ல் ஏற்பட்டது. 1-4-1977 முதல் கொடுக்க வேண்டிய இடைக்கால நிவாரணம் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்ட காரணத்தால் 1-4-1977 முதல் 31-12-1977 வரையில் 50 சதவீதம்—ரூ. 131, ரூ. 85 என்று இரு வகைப்படும். ரூபாய் 131 வொர்க்கிங் ஜெர்னலிஸ்ட்ஸ்க்கு, ரூ. 85 நான்-வொர்க்கிங் ஜெர்னலிஸ்ட்ஸ்க்கு, அதில் 50 சதவீதம், 50 சதவீதம் கொடுக்க ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். 1-1-1978-க்கு பின்னால் முழுமையாகக் கொடுப்பதற்கு ஒப்பந்தமாகியிருக்கிறது. வேண்டுமானால் ஒப்பந்தத்தில் உள்ள பத்து ஐட்டங்களையும் படிக்க நான் தயாராயிருக்கிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. சி. கோவிந்தராசன்: கூட்டுறவுத் துறையில் நடத்தப்பட்டுக்கொண்டிருந்த நவமணி பத்திரிகை கடந்த 10 மாதங்களாக நிறுத்தப்பட்டு அதில் பணிபுரியக்கூடிய ஊழியர்களும் மற்றவர்களும் கடந்த 10 மாதங்களாக ஊதியம் பெறாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுடைய கஷ்டங்களைத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா? நவமணி பத்திரிகையை அவர்களே மீண்டும் நடத்த முடியவிட்டால் அரசே அதை எடுத்து நடத்துவதற்கு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, நவமணி மட்டுமல்ல, கல்கி, சுவராஜ்யா, கோகுலம் போன்ற பத்திரிகைகளும் இதே நிலையில்தான் உள்ளன. ஆகவே அவற்றையும் சேர்த்து, தனிக் கேள்வி போட்டால் முழு விவரங்களையும் கொடுக்கிறேன்.

திரு. கு. ரமணி: இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை ஊழியர்களுடைய வேலைநிறுத்தத்தில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது என்றும் இப்போது ஒரு இடைக்கால நிவாரணம்

1977 ஆகஸ்ட் 5]

அளிக்கப்பட்டது என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒப்பந்தம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால் பணம் அவர்களுடைய கையில் வந்து சேர்ந்ததா? அப்படிச் சேரவில்லை என்று சொன்னால், அதை உடனடியாகக் கொடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா? அப்படியில்லையென்றால் மேற்கொண்டு ஸ்டிரைக் ஏற்படக்கூடும். ஆகவே இதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மத்திய அரசு இதில் தலையிட்டு பேசி, ஒரு இன்டரிம் ரிலீப்—இடைக்கால நிவாரணம் கொடுப்பது என்று முடிவு செய்தார்கள். இது 1-4-1977 முதல் அமலில் வந்திருக்க வேண்டும். 'compromise formula' என்ற முறையில், அமைச்சர் பேசி, ஒரு பக்கத்தில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் இன்னொரு முதலாளிகளின் பிரதிநிதிகளும் இருந்து பேசி 'It is a tripartite agreement' என்ற அளவில் அகில இந்திய பத்திரிகை ஊழியர்கள் தொழிற்சங்கங்கள் எல்லாம் இதில் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால், குறிப்பாக 'மக்கள் குரல்' பத்திரிகையிலிருந்து திரு. டி. ஆர். ஆர். போன்றவர்கள் எல்லாம் இதில் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. க. அன்பழகன்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, கல்கி, சுவராஜ்யா, போன்ற பத்திரிகைகளிலும் தொழிலாளர்களிடையே சில முரண்பாடு இருப்பதாகவும், தனிக்கேள்வி போட்டால் அந்த விவரங்களை எல்லாம் தருவதாகவும் சொன்னார்கள். அப்படி இந்தப் பத்திரிகை தொழிலாளர்களிடையே முரண்பாடுகள் இருக்கின்றதா, அவை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கல்கி, சுவராஜ்யா, கோகுலம் ஆகியவற்றிலுள்ள தொழிலாளர்களும் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக இப்பத்திரிகைகளை 1-9-1977 முதல் மூடப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள் . . . Industrial Disputes Act 25, WFA இதன்படி இதன்படி 60 நாட்கள் நோட்டீஸ் கொடுத்துள்ளனர். இப்படி பல விவரங்கள் இருக்கின்றன. ஆகவேதான் இதற்கெல்லாம் சேர்த்துத் தனிக்கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் இவைகளில் ஒப்பந்தம் ஏற்பட்டபிறகு 'தினத்தந்தி' பத்திரிகையிலும் 50 சதவீதம் கொடுக்க முன் வந்திருக்கிருர்கள். 'மாலேமுரசு' பத்திரிகையில் இதுவரை கொடுக்கப்படவில்லே என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியென்ருல் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலேவர் அவர்களே, தனிக் கேள்வி போடுமாறு வேண்டுகிறேன்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: 'சுதேசமித்திரன்' பத்திரிகை ஒரு தேசிய பத்திரிகை. 100 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கின்ற பத்திரிகை. அந்தப் பத்திரிகையும் மூடும் தருவாயில் இருக்கிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்கு விவரங்கள் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலேவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பர்மா அகதிகள்.

* 20 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

1977 ஜனவரி முடிய தமிழ்நாட்டில் குடியேறிய பர்மா அகதிகள் எத்தனே பேர்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: 1977 ஜனவரி முடிய 1,43,463 பர்மா அகதிகள் தமிழ்நாட்டில் குடியேறியுள்ளனர்.

திரு. என். கிட்டப்பா: தலேவர் அவர்களே, பேரறிஞர் அண்ணு அவர்கள் பர்மாவிலிருந்து அகதிகளாக வந்தவர்கள் பர்மாவில் விட்டுவிட்டு வந்த சொத்துக்களே மீட்டுக் கொடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருந்தார்கள். அதைத் தொடர்ந்து பர்மாவில் விட்டுவிட்டு வந்த சொத்துக்களே திரும்பப் பெறுவதற்கு வழிவகை காண இந்த அரசு முன்வருமா?